[2009 பிப்ரவரி 19

வினா வரிசை எண் 25, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

25—

கட்டட வசதி

***2929—திரு. என்.ஆர். ரெங்கராஜன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நபார்டு வங்கி உதவியுடன் பகுதி 6-ன்கீழ் பழைய கட்டடங்களை நீக்கிவிட்டு, புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன்.

முற்பகல் 9-35

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய டாக்டர் கலைஞர் அவர்களுடைய அரசில், பட்டுக்கோட்டை பெண்கள் மேல்நிலைப் பள்ளி மட்டுமல்லாமல் ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கும் சேர்த்து நிதி ஒதுக்கிக் கொடுத்திருக்கின்றார்கள். அதற்காக, பட்டுக்கோட்டை மக்கள் சார்பாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேசமயத்தில், இந்த இரண்டு கட்டடங்களுக்கும் டெண்டர் விடப்பட்டு, அதற்கான அனுமதி சென்னையிலுள்ள பொதுப் பணித் துறை உயர் அதிகாரிகளிடமிருந்து வரவேண்டுமென்று அதிகாரிகள் சொன்னார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அவர்களைத் தொடர்பு கொண்டு விரைவிலே இந்தப் பணி தொடங்குவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

2009 பிப்ரவரி 19]

அதேபோல, பல கட்டடங்களை இடித்துவிட்டுக் கட்ட வேண்டிய சூழ்நிலை இருக்கக்கூடிய காரணத்தினாலே, வரக்கூடிய பள்ளி விடுமுறைக் காலங்களிலே இந்தக் கட்டடங்களையெல்லாம் இடித்துவிட்டுக் கட்டுவதற்கு ஆவன செய்வார்களா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை மகளிர் மேல்நிலைப் பள்ளி மற்றும் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி இரண்டிலுமே நபார்டு வங்கி பகுதி-6 திட்டத்தின்கீழ் கட்டடங்கள் கட்டுவதற்காக அன்றைய மதிப்பின்படி ஏறத்தாழ 147 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

ஆனால், அங்கு புது இடங்கள் கிடைக்கவில்லை. ஏற்கெனவே இருக்கக்கூடிய கட்டடங்களை இடித்துவிட்டு கட்டக்கூடிய சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினால், Revised Estimates-க்காக மீண்டும் துறைக்கு சமர்ப்பிக்கப்பட்டது. இப்பொழுது மகளிர் மேல்நிலைப் பள்ளியைப் பொறுத்தமட்டில் 198 இலட்சம் ரூபாயும், ஆண்கள் மேல்நிலைப் பள்ளியைப் பொறுத்தமட்டில் 236 இலட்சம் ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டு, Revised Estimates sanction செய்து கொடுத்திருக்கிறார்கள். பொதுப் பணித் துறை அதிகாரிகளிடத்தில் நாங்களும் பேசியிருக்கிறோம். நானும் கரூரில் நடைபெற்ற Review Meeting-லே சொல்லியிருக்கிறேன். இந்தக் கல்வியாண்டின் தொடக்கத்திலேயே அந்தப் பணிகள் முடிவடைய வேண்டுமென்று நான் அவர்களிடத்திலே கேட்டுக் கொண்டிருக்கிறேன். அவர்களும் அதை வேகமாகச் செய்வதாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல இந்தக் கல்வியாண்டினுடைய இறுதியில், விடுமுறைக் காலங்களிலே கட்டடங்களையெல்லாம் இடித்துவிட்டு, புதிய கட்டடங்களைக் கட்டி, மாணவர்களுடைய பயன்பாட்டிற்கு உடனடியாகத் தருவதற்கு அரசு நிச்சயமாக ஆவன செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ரெங்கராஜன்.

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கும்,

அவர்கள் எடுத்திருக்கின்ற நல்ல முயற்சிக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன்.

திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி சிறப்பாக இயங்கி வருகிறது. அங்கே சுமார் 1,400 மாணவிகள் பயின்று வருகிறார்கள். ஆனால், அந்தப் பள்ளிக்கு இடம் போதாமல் இருக்கிறது. ஒரு ஏக்கர் நிலம்கூடக் கிடையாது. 75 சென்ட் நிலத்தில் அந்தப் பள்ளி சிறப்பாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றது. அங்கே எந்த அடிப்படை வசதிகளும் கிடையாது. போதுமான கட்டடங்களும் கிடையாது. இதுசம்பந்தமாக, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கடந்த நிதிநிலை அறிக்கைமீதான விவாதத்தில் பேசும்போதுகூட அந்தப் பள்ளிக் கட்டடத்தை வேறு இடத்திற்கு மாற்றித் தருமாறு கேட்டேன்; அந்தப் பகுதியிலே இருக்கின்ற நெடுஞ்சாலைத் துறையினுடைய பயணியர் விடுதியை வேறு இடத்திற்கு மாற்றிவிட்டு, அதே இடத்தில் அந்தப் பள்ளியை விரிவுபடுத்தியோ, சிப்காட் பகுதியிலே இருக்கக்கூடிய இடத்திலே அந்தப் பள்ளியை மாற்றியோ கட்டடங்களைக் கட்டுவதற்கு அரசு முன்வருமா என்பதைக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், திருப்புவனத்திலும் பெண்கள் மேல்நிலைப் பள்ளி சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. 40 சென்ட் நிலத்தில்தான் அந்தப் பள்ளி இயங்கி வருகிறது. இந்த இரண்டு பள்ளிகளிலுமே 80 சதவிகிதத்திற்கு மேல் மாணவிகள் தேர்ச்சி பெறுகிறார்கள். இப்பள்ளி சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. அதற்கும் போதுமான இடங்கள் இல்லை. கட்டட வசதிகளும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. குணசேகரன், ஒரே issue பற்றிக் கேளுங்கள். தொகுதியைப்பற்றிக் கேளுங்கள்.

திரு. ம. குணசேகரன்: ஒரே issue தான். இரண்டு பள்ளிகளிலுமே போதுமான அளவில் இடம் கிடையாது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த இரண்டு பள்ளிகளையும் வேறு இடத்திற்கு மாற்றி, அதிகமான கட்டடங்களைக் கட்டித் தந்து, அடிப்படை வசதிகளையும் செய்து தருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2009 பிப்ரவரி 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தமிழ் அறிஞர், கலைஞர் ஆட்சியிலே அரசுப் பள்ளிகளெல்லாம் சிறப்பாக நடைபெறுகின்றன என்று நம்முடைய உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதற்கு நான் நன்றியினைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, அவர் குறிப்பிட்டதைப்போல இரண்டு இடங்களிலுமே கட்டடங்களைக் கட்டித் தருவதிலே அரசுக்கு எந்தவிதமான தயக்கமும் கிடையாது. நபார்டு வங்கி மூலமாகக் கிடைத்த போதுமான நிதி நம்மிடத்திலே இருக்கிறது.

ஆனால், அவரே குறிப்பிட்டதைப்போல, அடிப்படைப் பிரச்சினை, இடவசதி இல்லாமல் இருக்கிறது. இடவசதியை உருவாக்குவதற்கு மாற்று ஏற்பாடுகளை நாங்கள் தொடர்ந்து மேற்கொண்டிருக்கிறோம். அவரே கடந்த முறை நிதிநிலை அறிக்கை விவாதத்திலே பேசியதைக் குறிப்பிட்டார். நெடுஞ்சாலைத் துறையாக இருந்தாலும், அறநிலையத் துறையாக இருந்தாலும், இதர துறைகளிலே இருக்கக்கூடிய இடங்களைப் பெற்றுத் தரக்கூடிய முயற்சியிலே எங்கள் துறையும் ஈடுபட்டிருக்கிறது. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் தன்னுடைய முயற்சியினை அதற்கு அளிப்பார்களென்றால், அவர்களுடைய ஒத்துழைப்போடு, அரசாங்கத்திற்கு, பள்ளிக் கல்வித் துறைக்கு, இடங்கள் அளிக்கக்கூடியபட்சத்தில், நிச்சயமாக அந்தப் பணிகளை முன்னுரிமை அடிப்படையில் நிறைவேற்றித் தருவதற்கு அரசு தயாராக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி.க. ராஜா.

முற்பகல் 9-40

திரு. தி.க. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வேலூர் மாவட்டம், திருப்பத்தூரிலே இருக்கிற அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி தொடங்கப்பட்டு 151 ஆண்டுகளுக்கு மேலாகிறது. பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் முதல்வராக

இருந்தபோது நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டது. கட்டடங்கள் மிகவும் பழமையாக இருக்கின்றன. 150 ஆண்டுகளைக் கடந்த பள்ளிக் கூடங்கள் என்று பார்த்தால், ஒரு சில பள்ளிக் கூடங்கள்தான் இருக்கும். இந்தப் பள்ளிக் கூடத்திலே 1,500 மாணவர்கள் படிக்கிறார்கள். கட்டட வசதியில்லாமல் தலைமையாசிரியர் அறைகூட இடிந்து விழக்கூடிய நிலைமையில் இருக்கிற காரணத்தினாலே, பழமைவாய்ந்த பள்ளி என்கிற வகையிலே, 20 வகுப்பறைகளைக் கொண்ட கட்டடம் தேவைப்படும் என்று ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நாங்கள் எல்லாம் கடிதம் அனுப்பியிருக்கிறோம். ஆகவே, முன்னுரிமை அடிப்படையிலே அந்தப் பள்ளிக்குக் கட்டடம் வழங்க மாண்புமிகு அமைச்சர் முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடக்கூடிய அந்த பள்ளிக் கட்டடத்திற்கான உரிய முன்மொழிவுகள் பெறப்பட்டிருக்கின்றன. இப்போது நபார்டு திட்டம் 9 அல்லது 10-ன்கீழ் அந்தப் பள்ளிகளுக்கு முன்னுரிமை அளிக்கச் சொல்லி நான் அதிகாரிகளிடத்திலே ஏற்கெனவே தெரிவித்திருக்கிறேன் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

1. இரங்கற்குறிப்பு—தொடர்ச்சி

முன்னாள் உறுப்பினர் மறைவு—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மறைந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எம்.ஏ. மஜீத் அவர்கள் திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் தொகுதியிலிருந்துதான் 1962 ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டு, சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2. வினாக்கள் விடைகள்—தொடர்ச்சி

உடுக்குறியிட்ட வினாக்கள்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 26, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். இராசசேகரன், மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.